திராவிடத்தால் வாழ்கிறோம்

932

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்



திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

24

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

எல்லாரும் இந்நாட்டு மன்னர்- “தங்கதுரை என் அண்ணா, என் பெயர் தம்பிதுரை!”

‘உழைப்போர்க்கு வாழ்வு, உரிமை உடையோர்க்கு நாடு’ எனவும் ‘நல்லோரும், அறிவில் வல்லோரும் வகுத்திட்ட தத்துவமே, எல்லோரும் இந்நாட்டு மன்னர்’ என்ற வாசகத்துடனே படம் தொடங்கும். இந்தத் திரைப்படத்தில் கலைஞர் எழுதிய எந்த ஒரு வசனத்தையும் எளிதாகக் கடந்துவிட முடியாது. ஒவ்வொன்றும் உள்ளர்த்தம் பொருந்தியவை. கலைஞரின் ஒவ்வொரு சொல்லும் ரசித்து, சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கும். எடுத்துக்காட்டாக படத்தின் தொடக்கக் காட்சியில் *(opening Scene)* செல்லையா தாத்தாவை திவான் துப்பாக்கி முனையில் வரவேற்கிறான். அப்போது இருவருக்குமான உரையாடல் இது...

திவான்: வாரும் வாரும்

செல்லையா : இதை விட அருகாமையில் வர முடியாது.

திவான்: செல்லையா கிழவரே, உமது உள்ளத்தைத் தொட்டுச் சில உண்மைகளை அறிய வேண்டும். அதற்கு அடையாளமாகத்தான்...

செல்லையா : ம்ஹூம்... தூய்மையான இரண்டு உள்ளங்கள்தான் ஒன்றையொன்று தொட முடியும். துப்பாக்கி முனை உதிரத்தைத்தான் குடிக்கும். உள்ளத்தைத் தொடாது.

திவான்: சபாஷ் பெரியவரே, பிரமாதமாகப் பேசுகிறீர். வாரும் உட்காரும். என்ன இருந்தாலும், அனுபவத்தால் பழுத்த பழமல்லவா? உமக்கு ஏறத்தாழ என்ன வயதாகிறது?

செல்லையா : அப்படியொன்றும் அதிக மில்லை, எட்டு பத்து வருடங்களைத் தாண்டி யிருக்கிறேன். அவ்வளவுதான்.

திவான்: எம்பது ! எம்பது வயதாகிறதா?... என்று கேட்கிறான்.

அப்படியே தந்தை பெரியாரை மனதில் வைத்து இக்காட்சிக்கான வசனத்தைக் கலைஞர் எழுதியிருப்பதைப் பார்ப்பவர்கள் உணர முடியும்.

வள்ளுவன் குன்றத்தின் வாழ்க்கை நெறி

அடுத்து, அரசரைச் சந்திக்க குறுக்கு வழியில் தம்பிதுரை வருகிறான். ஆனால், இளவரசியை மட்டுமே சந்திக்க முடிந்தது. இருவருக்குமான அந்த உரையாடல் இலக்கிய நயத்தோடும் நையாண்டியாகவும் இடம்பெற்றி ருக்கும். அப்போது அரசரைச் சந்திக்க முடியாமல் நாடு திரும்புகிறான் தம்பிதுரை.

அங்கு தனது மக்களிடம் தம்பிதுரை இவ்வாறு பேசுகிறான்...

தம்பிதுரை: முதலில் அரண்மனையில் நுழைதல் ஆகாது என்று அணை கட்டினார்கள், பிறகு திவானுடன் பேச வேண்டாம் என்று அணை கட்டினார்கள், திவானோ அரசரை நாங்கள் சந்திக்கக் கூடாது என்று அணை கட்டினார். இத்தனை அணை கட்டிய கயவர்கள் நமது காணாற்றுக்கு ஒரு அணை கட்ட மறுத்துவிட்டார்கள் மடையர்கள்.

சிங்கமுத்து: இங்கு உப்பில்லாத கஞ்சிக்கு வழியில்லை. அங்கு திவானுக்கு உப்பரிகை கட்ட பணமில்லையாம். உருகுகிறார்கள். அந்தப் பயல்களை எல்லாம், பாலைவன மணலில் போட்டு வறுத்தெடுக்கணும்.

செல்லையா: வலியன் கோட்டு திவானின் உதவியில்லாமலே காணாற்றுக்கு அணை கட்ட முடியும் என்ற சக்தியைக் காட்டுங்கள். நமது ஒற்றுமையைக் கண்டு சுதந்திரம் தானாக ஓடிவரும்.

படங்கள் உதவி : ஞானம்



சமாதானம் என்றழைத்துச் சதி நடத்துவது துரோகமா, அல்லது அதை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்துவது துரோகமா?

திவான்: ம்... கன்னியொருத்தியின் கண்வீச்சுக்குப் பழியாகி பகைவர்களிடம் என்னையே காட்டிக் கொடுக்கும் உன்னை இனியும் சுதந்திரமாக விட்டு வைப்பது முட்டாள்தனம்.

திருமேனி : இதுவே முட்டாள்தனம் என்றால், பதவி வெறி, அதிகார மயக்கம் இவைகளுக்கு முதலிடம் கொடுத்து, நாட்டு மக்களை வேட்டையாடித் திரியும் தங்களைச் சுதந்திரமாக விட்டு வைப்பது, அதைவிடப் பெரிய முட்டாள்தனம் என்று மக்கள் தீர்மானித்து விட்டால், என்ன செய்வீர்கள்?

திவான் : என்ன செய்வேனா? துப்பாக்கியில் குண்டு தீருமட்டும் சுட்டுத்தள்ளுவேன் அந்த மக்களை...

திருமேனி : ம்... இப்படிச் சொன்னவர்களின் கோட்டை கொத்தளங்கள் எல்லாம் கழுதை புரண்ட களமாகி விட்டதப்பா!

இவ்வாறு ஒவ்வொரு காட்சியிலும் ஆதிக்கத்தை எதிர்த்த, விடுதலை தாகம் கொண்ட தமிழ்நாட்டின் குரல் ஒலிக்கிறது. ‘திராவிட நாடு’ கோரிக்கையை அண்ணா கைவிடாத காலமான 1960-ஆம் ஆண்டு வெளிவந்த திரைப்படம் என்பதால், தமிழ்நாட்டின் மீதான வட நாட்டின் (ஒன்றிய அரசின்), ஆதிக்கத்தை எதிர்த்த தமிழர்களின், தமிழ்நாட்டின் உரிமைக் குரல் இத்திரைப்படத்தில் மிகத்தீவிரமாக ஒலிப்பதைக் காண்கிறோம்.

அதற்கு வள்ளுவரையும், திருக்குறளையும் ஒரு குறியீடாகக் கலைஞர் மிகச் சிறப்பான முறையில் பயன்படுத்திக் கொண்டுள்ளார். அதுமட்டுமில்லாமல்; வழக்கம் போலவே கலைஞரது பகுத்தறிவுக் கருத்துகளும் படத்தில் இடம் பெற்றுள்ளன.

மற்றொரு காட்சியில் வள்ளுவன் குன்றத்தைப் பற்றித் திருமேனி குறிப்பிடும்போது, அங்குள்ளவர்கள் நல்லவர்கள் மட்டும் அல்ல, கடுமையாக உழைத்து வாழும் பாட்டாளிகள் என்றும் குறிப்பிடுகின்றான். அதாவது யாருக்கும் அடிமையாக இல்லாத சுதந்திரமானதும் ஆதிக்கமற்றதுமான ஓர் உன்னதமான தமிழ்நாட்டைக் கலைஞர் 1960-களில் கற்பனை செய்தே இவ்வசனங்களை எழுதியிருக்கிறார்.

திருவள்ளுவருக்குக் கோட்டமும் சிலையும் எழுப்பிய கலைஞர் அதற்கெல்லாம் முன்பாகத் தனது வசனத்தினால் கட்டி எழுப்பிய திரைக்காவியம்தான் ‘எல்லோரும் இந்நாட்டு மன்னர்’!

...காட்சி விரியும்

திருவள்ளுவருக்குக் கோட்டமும் சிலையும் எழுப்பிய கலைஞர் அதற்கெல்லாம் முன்பாகத் தனது வசனத்தினால் கட்டி எழுப்பிய திரைக்காவியம்!

வளரட்டும், ‘கற்போம் திராவிடம்’ நூல் அறிமுகம்!

அறிவுசார்ந்த பிரச்சாரப் பணியில், தி.மு.கழகம் எப்பொழுதுமே முன்னிலை வகித்து வரும் அரசியல் கட்சி. கட்சியின் பல அணிகளும், தனி நபர்களும் படிப்பகம் தொடங்குதல் முதல், நூல் அறிமுகம் வரை பல பணிகளை முன்னெடுத்துள்ளனர், இப்போதும் முன்னெடுத்துச் செல்கின்றனர்.

அந்த வகையில், கழகத்தின் மாணவர் அணி மாநில துணைச் செயலாளர் தமிழ் கா.அமுதரசன் தனது சமூக வலைதளப் பக்கங்களில், ‘கற்போம் திராவிடம்’ என தினம் ஒரு புத்தகத்தைப் பரிந்துரை செய்து வருகிறார்.

கடந்த 20 நாட்களுக்கு மேலாக திராவிட இயக்கம், தி.மு.கழகம், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் தொலைநோக்குச் சிந்தனைகளைப் பேசும் பல நூல்களை அறிமுகம் செய்துள்ளார்.

நூல் குறித்த சிறு குறிப்புடன், ‘நியூஸ் கார்டு’ வகையில் வடிவமைத்து, சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகிறார். இந்த முயற்சி, கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் பெரிதும் கவனம் ஈர்த்துள்ளது. மாணவர்களின் சமூக வலைதளக் குழுக்களிலும் பரவலாகப் பகிரப்பட்டு வருகின்றன.

அரசியல் இயக்கமாக, மாணவர்களை அரசியல்படுத்தும், கழக மாணவர் அணி, அவர்களை வாசிக்க வைக்கும் பணியையும் கையில் எடுத்துள்ளது பாராட்டைப் பெற்று வருகிறது. வளரட்டும், ‘கற்போம் திராவிடம்’ நூல் அறிமுகம்.

ப்ளாஷ்பேக்

‘கார்குழலி கதிரொளியாய் வாழ்க!’

முனைவர் இறை.கார்குழலி

இளம் வயதில் பள்ளிப் பருவத்தில் தார் கொண்டு இந்திப் பெயரை அழித்து கைது செய்யப்பட்ட நான், உயர்கல்வி பயின்று முனைவர் பட்டம் பெற்ற பிறகு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை, சென்னை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். எனது முனைவர் பட்ட ஆய்வில் வாழ்த்து எழுதித் தருமாறு கூறினேன். “உனக்கு ஆய்வாளர் யார்?” என்று கேட்டார் “கண்ணகி கூட்டம்” என்றவுடன், கரந்தை கோவிந்தராசனார் நலமாக இருக்கின்றாரா என்று கேட்டறிந்து, என் பெயரைக் கேட்டார். அதனைச் சொன்னவுடன், ‘கார்குழலி’யின் பொருள் கூறுமாறு கேட்டார். நான் சொன்னேன். பின்னர், எனது ஆய்வு ஏட்டில், ‘கார்குழலி, கதிரொளியாய் வாழ்க!’ என்று எழுதி கையெழுத்திட்டார்கள். உடன் முன்னாள் அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான மறைந்த முன்னோடி கோ.சி.மணி, எனது தந்தை நகர மன்ற முன்னாள் தலைவர் சி.இறைவன் மற்றும் எனது குடும்பத்தினர். பின்னர் என் மூத்த மகனுக்கு, தலைவர் தந்த கதிரொளி என்கிற பெயரைச் சூட்டினேன்.

– முனைவர் இறை.கார்குழலி, மேனாள் மகளிர் அணி பிரச்சாரக் குழுச் செயலாளர், தஞ்சாவூர்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

கருவூலம்

ஹோம்லேண்ட் பத்திரிகை!

09.06.1957 முதல் பேரறிஞர் அண்ணா அவர்களை ஆசிரியராகக் கொண்டு ஆங்கில வார இதழ் ‘ஹோம் லேண்ட்’ வெளிவந்தது. அண்ணாமலை நகர் மாணவர்கள் இந்த ஏடு வெளிவர ரூ.10,000 நன்கொடையளித்தனர். இந்த ஏடு சிறப்பாக வெளிவர, கழகத் தோழர்கள் ஏ.எஸ்.வேணு, டி.எஸ்.கிள்ளிவளவன், எம்.எஸ்.வெங்கடாசலம், கிருட்டிணமூர்த்தி ஆகியோர் அண்ணாவுக்கு உதவியாக இருந்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131